
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 11: ஜீவநதி

2இராஜாக்கள் 5:1-14

### நடந்த கதை . . .

நாகமான் சிறந்த வீரர், செல்வந்தர், சீரியாவின் திறமையான தளபதி; அவருக்குக் குஷ்டரோகம் இருந்தது. வேதாகமக் காலங்களில் அது ஒரு கொடிய நோய். குஷ்டரோகிகளை அவர்களுடைய வீட்டிலிருந்து பிரித்து, தனியே வைப்பார்கள்; கொஞ்சம் கொஞ்ச மாக, உதவியற்ற நிலையில் அவர்கள் மரிக்கநேரிடும். எபிரெய அடிமைச் சிறுமி ஒருத்தி நாகமானின் வீட்டில் வேலைசெய்தாள். இஸ்ரவேலிலிருந்த எலிசா எனும் தீர்க்கதரிசியினிடத்திற்குத் தன் எஜமான் போவாரானால், நாகமானின் குஷ்டரோகத்தை அவர் குணமாக்கிவிடுவாரென்று சொன்னாள்.



நோய் குணமாவதற்காக எதையும் செய்வதற்கு ஆயத்தமாயிருந்த நாகமான், இஸ்ரவேலுக்குத் தன் பயணத்தைத் துவங்கினார். அவரோடுகூட பாதுகாப்பு வீரர்கள் சிலர் சென்றார்கள்; கிடைக்கவிருந்த சுகத்திற்குக் காணிக்கையாக ராஜா கொடுத்தனுப்பிய வெகுமதிகளும் சென்றன. தீர்க்கதரிசியின் எளிய குடியிருப்புமுன் நாகமான் வந்தார்; ஆனால், எலியா வெளியே வரவில்லை. 'நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்' என்று ஒரு சாதாரண சிகிச்சையைத் தன் வேலைக்காரன்மூலம் சொல்லியனுப்பினார். 2இராஜா 5:10.

நாகமானைத் தீர்க்கதரிசி கழுவச் சொன்னது, நாகமான் அழுக்காக இருந்ததைக் காட்டியது. அழுக்கான நதி நீரில், ஏழுதரம் ஸ்நானம்பண்ணுவது, பெருமையோடிருந்த அந்த சீரிய தளபதிக்குத் தலைகுனிவாகத் தெரிந்தது. கோபத்தோடு குதிரையைத் திருப்பினார். தமஸ்குவுக்குச் செல்லும் பாதை, யோர்தான் நதியோரம் இருந்தது. நதியோரம் சென்றபோது, தீர்க்கதரிசி சொன்னதைச் செய்துபார்க்கும்படி அவருடைய வேலைக்காரர்கள் வற்புறுத்தினார்கள். எனவே, குதிரையை நிறுத்தி, கீழே இறங்கினார்; குஷ்டரோகத்தை மறைக்க, தான் உடுத்தியிருந்த கவசத்தைக் கழற்றினார். யோர்தானின் தண்ணீருக்குள் மெதுவாக இறங்கினார். ஆறு முறை ஸ்நானம் பண்ணியபிறகும் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ஏழாவது முறை ஸ்நானம்பண்ணி எழுந்தபோது, குஷ்டரோகம் எங்கேயோ போய்விட்டது! சிறு குழந்தையின் சருமம்போல அவருடைய தோல் மாறிற்று. நாகமான் பெற்ற சுகத்தைப் போல, நீங்களும் குணமடைந்து, ஒரு புதுப்பிறப்பின் அனுபவத்தைப் பெறலாம்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்த அல்லது சுத்திகரிப்புச்செய்த தீர்க்கதரிசி யார்?**

**மத்தேயு 3:1,5,6.** *அந்நாட்களில் ________________ ________________ யூதேயாவின் வனாந்தரத்தில் வந்(தான்) ... அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் ... யோர்தான் நதியில் அவனால் ______________________ பெற்றார்கள்.*

**குறிப்பு:** நற்செய்தி புத்தகங்களின் சம்பவங்கள் ஞானஸ்நானத்தில் ஆரம்பித்து ஞானஸ்நானத்தில் முடிகின்றன. இது இயேசுவின் முக்கியப் போதனையாகவும் இருந்தது. மத்தேயு 28:18,19.

**2. பாவம் எனும் குஷ்டத்தைக் 'கழுவுவதை' அடையாளப்படுத்தும் மகிமையான வேதாகம சடங்கு எது?**

**அப்போஸ்தலர் 22:16.** *நீ எழுந்து ... ______________________ பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.*

**குறிப்பு:** வேதாகமம் சொல்லும் ஞானஸ்நானம் எனும் சடங்கானது ஒரு நபருடைய வாழ்க்கையிலிருந்து பாவம் கழுவப்படுவதையும், புதுப்பிறப்பையும் அடையாளப்படுத்துகிறது.

**3. என்னென்ன வகையான ஞானஸ்நானத்தை வேதாகமம் ஒத்துக்கொள்கிறது?**

**எபேசியர் 4:5.** *ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், __________ ______________ (ஞானஸ்நானம்) உண்டு.*

**குறிப்பு:** இன்று, குறைந்தபட்சம் 15 வகையான சடங்குகள் ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகின்றன. ஆனால், வேதாகமத்தின்படி மெய்யான ஞானஸ்நானம் ஒன்றே ஒன்றுதான்.

**4. 'ஞானஸ்நானம்' என்றால் என்ன?**

**கொலோசெயர் 2:12.** *ஞானஸ்நானத்திலே அவரோடேகூட ______________ ____________________________, அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழும்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*

**குறிப்பு:** 'பேப்ட்டிஸோ' எனும் கிரேக்க வார்த்தைக்கு 'நீரில் மூழ்கச்செய்' என்று அர்த்தம். ஞானஸ்நானம் எனும் பரிசுத்த சடங்கைச் சுட்டிக்காட்டத்தான் 'பேப்ட்டிஸோ' எனும் கிரேக்க வார்த்தை வேதாகமத்தில் பயன்பட்டுள்ளது. 'தெளித்தல்' அல்லது 'ஊற்றுதல்' என்பதற்கான கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்படவே இல்லை.

**5. இயேசுதான் நம் முன்மாதிரி. அவர் எவ்வாறு ஞானஸ்நானம் பெற்றார்?**

**மாற்கு 1:10.** *இயேசு ... வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார் ... அவர் ஜலத்திலிருந்து ________________________, வானம் திறக்கப்பட்டதை ... கண்டார்.*

**குறிப்பு:** நாகமான் குஷ்டரோகத்திலிருந்து குணமாக்கப்பட்ட அதே நதியில்தான் இயேசுவுக்கு யோவான் மூழ்க்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்கள் யோர்தான் நதியில் நின்றார்கள்; ஆற்றின் கரையில் நிற்கவில்லை. இயேசு நதியிலிருந்து 'கரையேறினார்'. அதனால்தான், சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்' யோவான் அங்கு ஞானஸ்நானம் கொடுத்துவந்தார். யோவான் 3:23. 'எல்லா நீதியையும்' நிறைவேற்றும்படி (மத்தேயு 3:15) இயேசு மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார்; இயேசுவின் முன்மாதிரியைக் கிறிஸ்தவர்கள் பின்பற்றவேண்டும். 1பேதுரு 2:21.

## 6. எத்தியோப்பியாவின் பிரதான மந்திரிக்கு பிலிப்பு எவ்வாறு ஞானஸ்நானம் கொடுத்தார்?

**அப்போஸ்தலர் 8:38,39.** *பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் ____________________; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து ________________________பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார்.*

## 7. ஞானஸ்நானம் சுட்டிக்காட்டும் வேறு சத்தியங்கள் என்ன?

**ரோமர் 6:4.** *பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து _________________________, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.*

**குறிப்பு:** கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஞானஸ்நானம் சுட்டிக் காட்டுகிறது. முதலில் பாவத்திற்கு மரிக்கிறோம், பிறகு பழைய பாவவாழ்க்கை தண்ணீரில் புதைக்கப்படுகிறது, கடைசியாகப் புதியதொரு வாழ்க்கைக்காகத் தண்ணீரிலிருந்து உயிர்த் தெழுப்பப்படுகிறோம். முழுக்கு ஞானஸ்நானம் இதைச் சரியாக அடையாளப்படுத்துகிறது. பாவ வாழ்க்கை மரிக்கிறது; பிறகு, ஞானஸ்நானம் பெறுகிறவர் தண்ணீருக்குள் பின்புறம் குனிந்து, முழுவதுமாகத் தண்ணீருக்குள் மூடப்படும்போது சில கணம் சுவாசமற்று இருக்கிறார் அல்லது அடக்கம்பண்ணப்படுகிறார். பிறகு அவர் தண்ணீரைவிட்டு வெளியே வந்து, புதிதாய்ப் பிறந்த குழந்தைபோல புதியதொரு வாழ்க்கை வாழ, புதிய சுவாசத்தைச் சுவாசிக்கிறார்; உயிர்த்தெழுதலை அது அடையாளப்படுத்துகிறது. வேறெந்த வகையான ஞானஸ்நானமும் வேதாகமத்தின் இந்த அடையாளமுறைக்கு ஒத்துவராது. உயிர்த்தெழுதலைக் கனப்படுத்தும் விதத்தில் ஞாயிற்றுக்கிழமையை தாங்கள் பரிசுத்த நாளாக ஆசரிப்பதாகச் சிலர் கூறுகிறார்கள்; ஆனால் அப்படியொரு முறைமைபற்றி வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

## 8. ஞானஸ்நானம் எவ்வளவு முக்கியமானது?

**மாற்கு 16:16.** *விசுவாசமுள்ளவனாகிய ஞானஸ்நானம் பெற்றவன் ____________________; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்.*

**யோவான் 3:5.** *ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க____________________.*

**குறிப்பு:** ஞானஸ்நானம் கட்டாயம் எடுக்கவேண்டிய ஒன்றென்று வேதாகமம் கட்டளையிட்டுள்ளது. ஆனாலும், சிலுவையில் தொங்கின கள்ளனைப்போல ஞானஸ்நானம் எடுக்கமுடியாத நிலையில் உள்ளவர்களுக்கு, தாம் பெற்ற ஞானஸ்நானத்தின் புண்ணியத்தை அவர்களின் கணக்கில் இயேசு எண்ணுகிறார். மத்தேயு 3:15.

## 9. மிகவும் ஆசீர்வாதமான என்ன நிகழ்ச்சியோடு ஞானஸ்நானம் ஒப்பிடப் படுகிறது?

**கலாத்தியர் 3:27.** *உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் ________________________.*

**குறிப்பு:** ஞானஸ்நானமானது திருமணச் சடங்கு போன்றது. 'உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்' என்று வேதாகமம் கூறுகிறது. ஏசாயா 54:5. திருமணத்திற்குப் பிறகு ஒரு பெண் கணவனின் பெயரைச் சேர்த்துக்கொள்கிறாள்; அதுபோல, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொள்கிறார்கள்; அதுமுதல் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அன்பினாலும், அர்ப்பணிப்பினாலும்தான் இரண்டு சடங்குகளுமே அர்த்தமுடையவைகளாகின்றன. திருமணவாழ்வில் திருமணச் சடங்கு எவ்வளவு முக்கியமோ, கிறிஸ்தவ வாழ்வில் ஞானஸ்நானம் அவ்வளவு முக்கியம்.

## 10. தாம் பரலோகம் செல்வதற்குமுன் இயேசு தம் மக்களுக்குக் கொடுத்த கட்டளை என்ன?

**மத்தேயு 28:19.** *நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ____________________ கொடு(ங்கள்).*

**குறிப்பு:** பேதுரு இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். பெந்தெகொஸ்தே நாளில் மனமாறிய மக்களிடம், 'நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறினார். அப்போஸ்தலர் 2:38.

## 11. ஞானஸ்நானம் பெறுவதற்கான தகுதிகள்பற்றி வேதாகமம் கூறுவது என்ன?

**அப்போஸ்தலர் 2:38.** *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் ____________________, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

**அ.** இயேசுவின் போதனைகளை அறிதல் (மத்தேயு 28:19,20).

**ஆ.** இயேசுவின் போதனைகளை எல்லாம் விசுவாசித்தல் (மாற்கு 16:16).

**இ.** கடந்தகால பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் (அப்போஸ்தலர் 2:38).

**ஈ.** முழுஇருதயத்தோடும் விசுவாசித்தல் (அப்போஸ்தலர் 8:37).

**உ.** பாவத்திலிருந்து விலக சம்மதித்தல். (லூக்கா 3:7,8; ரோமர் 6:5,6).

**ஊ.** கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, புதிய பிறப்பை அனுபவித்தல். (2கொரிந்தியர் 5:17; யோவான் 3:3,5).

**குறிப்பு:** மேலுள்ள விஷயங்களை ஒரு குழந்தை செய்யமுடியாது; எனவே, ஒரு குழந்தை வளர்ந்து நற்செய்தியைப் புரிந்துகொள்ளும் பிராயத்தை எட்டும்மட்டும் அந்தக் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பது வேதாகமத்திற்குப் புறம்பானது.

## 12. ஞானஸ்நானத்திற்கு ஒப்பான போலிகள் எப்படி தோன்றின?

**மாற்கு 7:8.** *நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய ____________________ கைக்கொண்டுவரு(கிறீர்கள்)*

**குறிப்பு:** வேதாகமக் காலங்களில், இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும்கூட முழுக்கு ஞானஸ்நான முறைமாத்திரம்தான் பின்பற்றப்பட்டது. பிறகு, சில மனிதர்கள் தங்கள் வசதிக்காக, தவறான ஞானஸ்நான முறைகளை அறிமுகப் படுத்தினார்கள். எனவே, தேவன் ஏற்படுத்தின பரிசுத்த ஞானஸ்நான முறை மறைக்கப்பட்டது; அது சுட்டிக் காட்டின ஆழமான அர்த்தமும் திரிக்கப்பட்டது.

## 13. தேவனுடைய சத்தியத்தைவிட மனிதருடைய போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள்பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது?

**மத்தேயு 15:9.** ____________________ *கற்பனையை உபதேசங்களாகப் போதித்து,* ____________________ *எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.*

**கலாத்தியர் 1:8.** *நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன்* ____________________.

## 14. பரிசுத்த ஆவியினாலான ஞானஸ்நானம், ஜலத்தினாலான முழுக்கு ஞானஸ்நானத்தைப் போக்கிவிட்டதா?

**அப்போஸ்தலர் 2:38.** *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே* ____________________ *பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது* ______________ ______________ *வரத்தைப் பெறுவீர்கள்.*

**குறிப்பு:** இல்லை. பேதுரு பிரசங்கித்தபோது (அப் 10:44–48), அதைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்; அவர்களில் அநேகர் ஞானஸ்நானம் பெறாதவர்கள். பரிசுத்த ஆவியினாலான ஞானஸ்நானத்தை அவர்கள் பெற்றுக்கொண்டாலும் அவர்கள் ஜலத்தினாலான ஞானஸ்நானத்தைப் பெறவேண்டுமென்று பேதுரு வலியுறுத்தினார்.

## 15. மறுஞானஸ்நானம் சரியானதா?

**அப்போஸ்தலர் 19:2–5.** *நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் ________________போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ______________________ பெற்றார்கள்.*

**குறிப்பு:** எபேசுவில் ஒருநாள் பவுல் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்ற 12 பேர் அங்கிருந்ததைக் கண்டார். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியினாலான ஞானஸ்நானம் பற்றிக் கேள்விப்படாதவர்களாக இருந்தார்கள். புதிதாக அந்தச் சத்தியத்தை அறிந்துகொண்டதும் மறுஞானஸ்நானம் பெற்றார்கள். அதுபோல, ஒருவர் தன் கிறிஸ்தவ அனுபவத்தை முற்றிலும் இழந்தவராக இருந்தால், அவர் மீண்டும் ஆண்டவரிடம் வரும்போது கண்டிப்பாக மறுஞானஸ்நானம் பெறவேண்டும். வேதாகம முறைப்படி ஞானஸ்நானம் பெறாதவரும் மறுஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

## 16. ஞானஸ்நானத்திற்கும் சபையில் சேருவதற்கும் சம்பந்தம் இருக்கிறதா?

**அப்போஸ்தலர் 2:41.** *அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் ________________________________________________.*

**அப்போஸ்தலர் 2:47.** *தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் _____________ சேர்த்துக்கொண்டு வந்தார்.*

**கொலோசெயர் 3:15.** *நீங்கள் ஒரே ___________________ அழைக்கப்பட்டீர்கள்.*
**கொலோசெயர் 1:18.** *அவரே ___________________ சரீரத்துக்குத் தலையானவர்.*
**1கொரிந்தியர் 12:13.** *எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற் ___________ ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்*

**குறிப்பு:** வேதவாக்கியங்கள் தெளிவாகச் சொல்கின்றன. தேவபிள்ளைகள் அனைவரும் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதுதான் சபை. ஞானஸ்நானத்தின் மூலம் நாம் சபையில் சேர்கிறோம். புதிதாக பிறந்த ஒரு குழந்தை ஒரு குடும்பத்தில்தான் பாலூட்டப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது.

## 17. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள நான் மறுத்தால், யாருடைய ஆலோசனையை நான் மறுக்கிறேன்?

**லூக்கா 7:30.** *பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக ______________________ ______________________ தள்ளிவிட்டார்கள்.*

**குறிப்பு:** எழும்பாது. இந்த வாக்குத்தத்தம் விசேஷமானது. பாவம் மீண்டும் எழும்பவே எழும்பாது.

## 18. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, பிதா சொன்னது என்ன?

**மாற்கு 1:9,11.** *அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார் … அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் _______________________ என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.*

**குறிப்பு:** ஒருவன் தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும்போது, தேவன் மகிழ்ச்சியடைகிறார்.

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

'நீ என்னுடைய நேசகுமாரன் (அல்லது குமாரத்தி), உன்னில் நான் பிரியமாயிருக்கிறேன்' என்று தேவன் உங்களிடம் சொல்லும்படி, ஞானஸ்நானம் எனும் புனிதச் சடங்கை நிறைவேற்ற ஆயத்தமா?

**பதில்:** ____________________

# துணைப்பகுதி

**மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.**

## முன்மாதிரி ஞானஸ்நானம்

இயேசு பாவமில்லாதவர். பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்காக அவர் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. 1 பேதுரு 2:22. அதனால்தான், யோவானிடம் ஞானஸ்நானம் பெறும்படி இயேசு யோர்தான் நதிக்கு வந்தபோது, யோவான் குழம்பினார். ''நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?'' என்று கேட்டார். மத்தேயு 3:14.

**அப்படியானால், இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? மூன்று காரணங்கள் உள்ளன.**

1. ஞானஸ்நானம் எடுக்க முடியாதவர்களுக்காக இயேசு ஞானஸ்நானம் பெற்றார். சில சமயங்களில், சிறைச்சாலையில் அல்லது மருத்துவமனையில் உள்ளவர்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது, சூழ்நிலைகளின்நிமித்தம் அவர்கள் ஞானஸ்நானம் பெறமுடியாது. இயேசு ஞானஸ்நானம்பெற்று, அந்தப் புண்ணியத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். சிலுவையில் தொங்கிய கள்ளன் அதற்கு ஓர் உதாரணம். லூக்கா 23:43.

2. இயேசுவின் அடிச்சுவடுகளில் நாம் நடக்கும்படி, ஒருமுன்மாதிரியாக இயேசு ஞானஸ்நானம் பெற்றார். 1 பேதுரு 2:21.

3. விசுவாசத்தினால் நாம் எதைப் பெறுகிறோம் என்பதை அவருடைய அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு இயேசு ஞானஸ்நானம்பெற்றார்.

இதை விலாவாரியாக அறிய, கீழுள்ள வசனங்களை ஆராய்வோம்; விசுவாசத்தினால் எதைப் பெறலாமெனக் காண்போம். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று உரைத்தது. மத்தேயு 3:16,17.

**''வானம் ... திறக்கப்பட்டது''** = தேவனிடம் செல்லும் பாக்கியம் பெறுகிறோம்.

**''கண்டார்''** = நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகின்றன; புதிய பகுத்தறிவும் புத்தியும் பெறுகிறோம்.

**''தேவஆவி''** = அவருடைய வழிநடத்துதலை உணர்கிறோம்.

**''புறாவைப்போல இறங்கினார்''** = சமாதானம் மெதுவாக நம் இருதயங்களில் பிரவேசிக்கிறது.

**''ஒரு சத்தம் உண்டாகி''** = அமர்ந்த, மெல்லிய சத்தம் கேட்க ஆரம்பிக்கிறது.

**''என்னுடைய நேசகுமாரன்''** = அவருடைய அரசகுடும்பத்தில் சேர்க்கப்படுகிறோம்; வேறொரு நாட்டின் குடிமக்களாகிறோம்.

**''பிரியப்படுகிறேன்''** = தேவன் நம்மை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு மன்னிக்கிறார்.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com